Dhinathdhalam@gmail.com
www.dhinathdhalam.com

**விளம்பரதாரர்கள் தேவை**
தமிழகம் முழுவதும் 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும் செய்தி – விளம்பரம் சேகரிக்க முழு நேர – பகுதி நேர பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.
☎ 9 111 222 654

# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556
நடுநிலை நாளிதழ்
DHINATH DHALAM Tamil & English daily Paper

**செய்தியாளர்கள் தேவை**



தமிழகம் முழுவதும் மாவட்டம் & தாலுகா வாரியாக சந்தாதாரர் அடிப்படையில் ஆண்/பெண் நிருபர்கள் தேவை
☎ 94440 82959

ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D.,
நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 083 | திங்கள் Monday | 22.06.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode

# யோகா தினம் என்பது உலகின் மிகப்பெரிய சமூக கொண்டாட்டம்

## கொல்கத்தாவில் நடைபெற்ற சர்வதேச யோகா தினம் நிகழ்ச்சியில் பங்கேற்று பிரதமர் மோடி பெருமிதம்



கொல்கத்தா:

உலகின் மிகப்பெரிய சமூக கொண்டாட்டமாக யோகா தினம் மாறியுள்ளது என பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

உலகம் முழுவதும் இன்று 12வது சர்வதேச யோகா தினம் கொண்டாடப்படுகிறது. அதன்படி, நாடு முழுவதும் இன்று சுமார் 2,500 இடங்களில் யோகா தினக் கொண்டாட்டங்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. மேற்கு வங்க மாநிலத் தலைநகர் கொல்கத்தாவின் ரெட் சாலை பகுதியில் நடைபெற்ற யோகா தினம் நிகழ்ச்சியில் பிரதமர் மோடி பங்கேற்றார்.

அங்கு ஆயிரக்கணக்கான யோகா பயிற்சியாளர்களுடன் இணைந்து பிரதமர் மோடி யோகா செய்தார்.

அப்போது பேசிய பிரதமர் மோடி, நாம் வாழும் பூமிப்பந்தில் அதிக பகல் பொழுதை கொண்ட நாளாக ஜூன் 21ஆம் தேதியான யோகா தினமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது என்று பெருமிதம் தெரிவித்த மோடி, யோகா மக்களை ஒன்று சேர்க்கிறது. இந்நாளில் மக்களுக்கு யோகா தின வாழ்த்துகள் என்று தெரிவித்தார்.

இந்த ஆண்டு யோகா தினத்தின் கருப்பொருள் ஆரோக்கியமான முதுமைக்கான யோகா என்பதை குறிப்பிட்ட மோடி, உடல்நலம், மனநலம் மற்றும் சுறுசுறுப்பான முதுமை ஆகியவற்றை மேம்பத்துவதிலும், வாழ்க்கை தரத்தை மேம்படுத்தவும் யோகா முக்கிய பங்கு வகிக்கிறது என்றார்.

யோகா உடற்பயிற்சி மட்டுமல்ல, அது எந்த ஒரு குறிப்பிட்ட வயதினருக்கு மட்டுமானதல்ல, யோகா என்பது மனித ஆன்மாவின் வெளிப்பாடு என்றார்.

வயது முதிர்வு மனித ஆற்றலை குறைத்து விடாதவாறு பார்த்து கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்திய மோடி, ஆரோக்கியமான முதுமைக்கான யோகா பற்றி பேசும்போது, 20 வயதில் இருந்ததை விட 40 வயதில் நெகிழ்வுத்தன்மையுடன் இருப்பது தான் நமது இலக்கு. மேலும் 30 வயதில் இருந்ததை விட 50 வயதில் அதிக ஆற்றலுடன் இருக்க விரும்புகிறோம். யோகாவை மக்களின் அன்றாட வாழ்க்கையின் ஒரு பகுதியாக மாற்ற வேண்டும் என்ற தமது விருப்பத்தை வெளிப்படுத்தினார்.

ஐக்கிய நாடுகள் சபையின் 69வது கூட்டத் தொடரில், பிரதமர் மோடி முன்வைத்த சர்வதேச யோகா தினம் குறித்த தீர்மானத்திற்கு, 175 உறுப்பு நாடுகள் ஆதரவு தெரிவித்தன.

அதன்படி, கடந்த ஜூன் 21ஆம் தேதி 2015, முதல் சர்வதேச யோகாதினம் கொண்டாடப்பட்டது குறிப்பிடத்தக்கது

# திருவள்ளூரில் அமோனியா வாயுக்கசிவால் உயிரிழந்த குடும்பத்தினருக்கு முதலமைச்சர் விஜய் இரங்கல், ரூ.2 லட்சம் நிவாரணம் அறிவிப்பு



திருவள்ளூர் மாவட்டம் பெரியபாளையம் அருகே உள்ள தனியார் மீன் உணவு ஏற்றுமதி தொழிற்சாலையில் ஏற்பட்ட பயங்கர அம்மோனியா வாயு கசிவு காரணமாக, 2 பெண் தொழிலாளர்கள் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர். இந்த கோர விபத்துக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ள மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. த.வெ.க. விஜய் அவர்கள், உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா 2 லட்சம் ரூபாய் நிதியுதவி அறிவித்து அதிரடி உத்தரவுகளைப் பிறப்பித்துள்ளார்.

திருவள்ளூர் மாவட்டம், ஊத்துக்கோட்டை வட்டம், பெரியபாளையம் அருகே உள்ள கன்னிகைப்பேர் கிராமத்தில் தனியார் மீன் உணவு ஏற்றுமதி தொழிற்சாலை இயங்கி வருகிறது. இன்று (21.06.2026) இந்த ஆலையின் உற்பத்தி பிரிவில் எதிர்பாராதவிதமாக அம்மோனியா வாயு கசிவு ஏற்பட்டது. இந்த நச்சு வாயு பரவியதில் ஆலைக்குள் பணியில் இருந்த 64 நபர்கள் (60 பெண்கள், 4 ஆண்கள்) கடுமையான மூச்சுத்திணறலால் பாதிக்கப்பட்டனர். இவர்களில் 2 பெண்கள் சிகிச்சை பலனின்றி துரதிஷ்ட வசமாக உயிரிழந்தனர்.

பாதிக்கப்பட்டவர்களில் 15 நபர்கள் அரசு மருத்துவமனையிலும், 23 நபர்கள் தனியார் மருத்துவமனையின் தீவிர சிகிச்சை பிரிவிலும் (ICU), மேலும் 24 நபர்கள் தனியார் மருத்துவமனையின் பொது வார்டிலும் தீவிர கண்காணிப்பில் வைக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்த விபத்து குறித்து விரிவான விசாரணை நடத்த முதலமைச்சர் திரு. த.வெ.க. விஜய் உத்தரவிட்டுள்ளார். இயக்குநர் தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துறை, கூடுதல் இயக்குநர் பொது சுகாதாரத் துறை மற்றும் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரிய உறுப்பினர்-செயலாளர் ஆகியோர் அடங்கிய உயர்மட்டக் குழு சம்பவ இடத்தில் நேரடியாக ஆய்வு செய்யவுள்ளது.

இந்தக் குழு தனது முதற்கட்ட விசாரணை அறிக்கையினை 24 மணி நேரத்திற்குள்ளாகவும், விபத்துக்கான முழுமையான காரணங்கள் அடங்கிய இறுதி அறிக்கையினை 3 நாட்களுக்குள்ளாகவும் சமர்ப்பிக்க வேண்டும் எனகாலக்கெடு விதிக்கப்பட்டுள்ளது. மேலும், எதிர்காலத்தில் இதுபோன்ற விபத்துக்களைத் தவிர்க்கும் பொருட்டு, மாநிலத்தில் உள்ள அனைத்து பேரபாய தொழிற்சாலைகளிலும் (Hazardous Industries) உடனடியாக குழு ஆய்வுகள் மேற்கொள்ள முதலமைச்சர் உத்தரவிட்டுள்ளார். உயிரிழந்த இரண்டு பெண்களின் குடும்பத்தினருக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா இரண்டு லட்சம் ரூபாய் வழங்க முதலமைச்சர் விஜய் உத்தரவிட்டுள்ளார். உயிரிழந்தவர்கள் வெளிமாநில தொழிலாளர்கள் என்பதால், அவர்களின் உடல்களை அரசு செலவிலேயே சொந்த மாநிலத்திற்கு அனுப்பி நல்லடக்கம் செய்ய தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு உள்ளன.



மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள 62 பேருக்கும் சிறப்பான சிகிச்சை அளிக்க உத்தரவிடப்பட்டுள்ளதுடன், பாதிக்கப்பட்ட அனைத்து தொழிலாளர்களுக்கும் தொழிலாளர் மாநில ஈட்டுறுதி காப்பீட்டு (ESI) திட்டம் அல்லது வேலையாள் இழப்பீடு சட்டத்தின் கீழ் உரிய இழப்பீட்டுத் தொகையை உடனடியாக வழங்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகள் நேரடி ஆய்வு

விபத்து நடந்த பகுதிக்கு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர், சட்டமன்ற உறுப்பினர், மாவட்ட கண்காணிப்பு அலுவலர் மற்றும் திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் ஆகியோர் நேரடியாகச் சென்று ஆய்வு நடத்தியுள்ளனர்

. பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்குத் தேவைப்படும் அனைத்து அவசர உதவிகளையும் உடனடியாக வழங்க முதலமைச்சர் விஜய் அவர்கள் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

**வரி விளம்பரங்கள்**



தினத்தளம்
DHINATH DHALAM

மணமாலை | கோவில் திருவிழா | அரசியல் நிகழ்வுகள்
கல்வி | திருமண நாள் | பிறந்த நாள் | ஆண்டு விழா
திறப்பு விழா | வீட்டு சுப நிகழ்ச்சிகள் | நினைவு நாள்
ரியல் எஸ்டேட் | பைனான்ஸ் | நகைக்கடன்
வேலை வாய்ப்பு | ஆட்டோமொபைல்

தொடர்புக்கு : ☎ +919444082959

# 6 மாவட்டங்களுக்கு கனமழை எச்சரிக்கை.. வானிலை மையம் வெளியிட்ட முக்கிய அறிவிப்பு



சென்னை வானிலை மையம் வெளியிட்டிருந்த செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:-

சுமார் 5.8 கிமீ உயரத்தில் வடக்கு கேரள பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல காற்றழுத்த சுழற்சி நிலவுகிறது.

சுமார் 3.1 கிமீ உயரத்தில் வடக்கு லட்சத்தீவு மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல காற்றழுத்தசுழற்சி நிலவுகிறது.

தமிழகத்தில் ஒருசில இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள், டெல்டா மாவட்டங்கள், வடதமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் (மணிக்கு 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்தில்) கூடிய மிதமான மழை பெய்யக்கூடும்.

திருநெல்வேலி மாவட்டத்தின் மலைப்பகுதிகள் மற்றும் நீலகிரி, கோயம்புத்தூர், திண்டுக்கல், தேனி, கன்னியாகுமரி மாவட்டங்களில் ஒரிரு இடங்களில் இடி மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் (மணிக்கு 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்தில்) கூடிய கனமழை பெய்யக்கூடும்

தமிழகத்தில் ஒருசில இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள், டெல்டா மாவட்டங்கள், வடதமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் (மணிக்கு 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்தில்) கூடிய மிதமான மழை பெய்யக்கூடும்.

கோயம்புத்தூர் மாவட்டத்தின் மலைப்பகுதிகள் மற்றும் நீலகிரி, திண்டுக்கல், தேனி, மதுரை மற்றும் சிவகங்கை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் (மணிக்கு 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்தில்) கூடிய கனமழை பெய்யக்கூடும்.

23-06-2026 மற்றும் 24-06-2026: தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

25-06-2026 மற்றும் 26-06-2026: தமிழகத்தில் ஒருசில இடங்களிலும் புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

**செய்திகள்**
உடனுக்குடன் படிக்க
தினத்தளம்
DHINATH DHALAM
வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்

Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt



கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில் சங்கராபுரம் சட்டமன்ற தொகுதி வேட்பாளராக போட்டியிட்ட அதிமுக ராகேஷ் அவர்கள் சட்டமன்ற உறுப்பினராக வெற்றி பெற்றார் இந்நிலையில் இன்று சங்கராபுரம் ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில் இருக்கும் சட்டமன்ற உறுப்பினர் இன்று முதல் முதலாக முறையாக அலுவலகத்தை திறப்பதற்கு அதிமுக முன்னாள் அமைச்சர் சிவி சண்முகம் ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார். பின்பு சட்டமன்ற அலுவலக நாற்காலியில் எம்எல்ஏ ராகேஷை அமர வைத்தார். இந்நிகழ்வில் உடன் ஒன்றிய செயலாளர்கள் நகர செயலாளர்கள்கள்ளக்குறிச்சி முன்னாள் மாவட்ட ஒன்றிய நிர்வாகிகள் முன்னாள் அமைச்சர் சி.வி சண்முகம் சட்டமன்ற உறுப்பினர் ராகேஷ் அவர்களுக்கும் அனைவரும் மிகுந்த உற்சாக வரவேற்பு அளித்துள்ளனர். நிகழ்வில் ஏராளமான பெண்கள் ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொண்டர்கள் கலந்து கொண்டனர்.



மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் புதிய மாவட்ட ஆட்சித்தலைவராக நிஷாந்த் கிருஷ்ணா பொறுப்பேற்றுக் கொண்டார்.

## மதுரை திருப்பரங்குன்றம் அடுத்துள்ள திருநகர் பகுதியில்

# அமைச்சர் சி.டி.ஆர்.நிர்மல் குமாரின் புதிய சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் திறப்பு விழா



மதுரை திருப்பரங்குன்றம் அடுத்துள்ள திருநகர் பகுதியில் அமைச்சரும் திருப்பரங்குன்றம் சட்டமன்ற உறுப்பினருமான சிடி ஆர் நிர்மல் குமாரின் புதிய சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் திறப்பு விழா இன்று நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினராக மதுரை எம் பி சு வெங்கடேசன், விருதுநகர் நாடாளுமன்ற உறுப்பினர் மாணிக்கம் தாகூர் ஆகியோர் கலந்து கொண்டு ரிப்பன் வெட்டி அலுவலகத்தை திறந்து வைத்தனர். பின்னர் எம்பிக்கள் இருவரும் அமைச்சரை கையைப் பிடித்து ஒருசேர நாற்காலியில் அமர வைத்தனர்.

பின்னர் மூவரும் கூட்டாக செய்தியாளர்களை சந்தித்தனர் முதலில் அமைச்சர் சி டி ஆர் பேசும்போது:

திருப்பரங்குன்றம் சட்டமன்ற அலுவலகம் முழுவது செயல்படும்.24 மணி நேரமும் நிர்வாகிகள் இங்கு இருப்பார்கள் அனைத்து மனுக்களும் இங்கு பெறப்படும்.

திருப்பரங்குன்றத்தில் உள்ள அரசு அலுவலகத்தை வேறு பணிக்கு பயன்படுத்துவோம் இரண்டு அலுவலகம் இருந்தால் மக்களுக்கு சரியாக இருக்காது. சுய உதவி குழு அல்லது இசேவை மையம் போன்றவற்றிற்கு பயன்படும்.

நீட் தேர்வு குறித்த கேள்விக்கு: நீட் மிகப் பெரிய குளறுபடி அது தேவையில்லை என்பது தான் எங்களின் எண்ணம்மக்களுக்குதேவையில்லாத அலைக்கழிப்பு. தேர்வை கூட ஒன்றிய அரசு சரியாக நடத்த முடியவில்லை. வினாத்தாள்களை சரியாக கொண்டு சேர்க்க முடியவில்லை மையங்களும் கம்மியாக உள்ளது.எத்தனை ஆண்டுகள் ஆகியும் தேர்வில் கூட மெச்சூரிட்டி இல்லை. மாணவர்களை தோடு கழட்டு வது துப்பட்டாவை கலட்டு என்று சொல்கிறீர்கள் ஆனால் வினாத்தாள்களை உங்களால் பத்திரமாக எடுத்து வர முடியவில்லை.

பாஜக இருக்கும் மாநிலங்கள் என்றால் இந்த தவறு கடன் இரண்டு ஆண்டுகளாக நடைபெறுகிறது இந்த தேர்தலுக்கான காரணம் பூர்த்தி அடையவில்லை.இரண்டாவது முறையாகஇன்று தேர்வு எழுதுகிறார்கள் கடந்த வாரம் ஒரு மாணவர் தற்கொலை செய்து கொண்டார். இதற்கு மோடி தான் பொறுப்பேற்கவேண்டும்.மாணவர்களுக்கு இரண்டு சுமை நீட் தேர்வை ரத்து செய்ய வேண்டும் தனியார் கொள்ளையடிப்பதற்குநீட்கோச்சிங்சென்டர் திறக்க தான் வழி செய்கிறார்கள். பெற்றோர்களுக்கு இரண்டு மூன்று லட்ச ரூபாய் கூடுதல் செலவை செய்திருக்கிறார்கள்.

மேகதாது அணை விவகாரம் குறித்த கேள்விக்கு: கர்நாடகத்தில் இருக்கும் அனைத்து கட்சிகளும் இதை அரசியல் ரீதியாகதான் பயன்படுத்துகிறார்கள். நாம் இதை சட்டரீதியாக தான் முன்னெடுப்போம். இங்கு இருக்கும் அனைத்து கட்சிகளும் தீர்மானம் நிறைவேற்றி இருக்கிறோம்.

நான் முதல்வன் திட்டம் பெயர் மாற்றம் குறித்த கேள்விக்கு: எந்த ஸ்டிக்கரும் ஒட்டவில்லை பெயர் புரிய வேண்டும் அது திறன் மேம்பாட்டுக்கான திட்டம் நான் முதல்வன் திட்டம் என்றால் அது மக்களுக்கு புரியவில்லை. திட்டம் தொடர்கிறது பெயர்குழப்பமாகஇருப்பதால் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

அதிமுக திமுக கூட்டணி பேச்சுவார்த்தை நடத்தவில்லை அதிமுக பங்காளி தான் என ஆர் எஸ் பாரதி பேசியது குறித்தகேள்விக்கு:இருவரும் எதிராக இருந்து தேர்தலை சந்தித்து விட்டு இப்பொழுது இருவரும் ஒன்று சேர நினைக்கிறார்கள் தைரியம் இருந்தால் இருவரும் வெளிப்படையாக அறிவிக்க வேண்டும். ஸ்டாலின் இபிஎஸ் சேர்ந்து திமுக குடும்பத்தை காப்பாற்றுவதற்காக ஆட்சிக்கு வர நினைத்தார்கள்.

அமைச்சர் ஆதவ் தான் பவர் சென்டர் என நயினார் கூறியது குறித்த கேள்விக்கு:

முதல்வர் தான் சென்டர் அவரை தவிர்த்து எந்தசென்டரும்இல்லை.

பள்ளிகள் மருத்துவமனையில் தவெகாவினர் ரீல்ஸ் வெளியிடுவது குறித்த கேள்விக்கு: பொதுமக்களுடன் சேர்ந்து நிறைய நிர்வாகிகள் பார்க்கிறார்கள் பார்க்கிறார்கள்.தேவையில்லாமல் யாருக்கும் தொந்தரவு கொடுக்க வேண்டாம் என்று சொல்லி இருக்கும். இன்றைக்குத்தான் பொதுமக்கள் சென்று பார்ப்பதற்கு வாய்ப்பு கிடைத்துள்ளது முன்னாடி எல்லாம் தலைமைச் செயலகத்தில் புரோக்கர் தான் இருப்பார்கள் இப்போது பொதுமக்கள் சொல்கிறார்கள் அதில் தேவை இல்லாமல் தொந்தரவு செய்தால் முதல்வர் அனுமதிக்க மாட்டார்.

விமான நிலையம் விரிவாக்கம் மற்றும் மெட்ரோ திட்டம் குறித்த கேள்விக்கு:

மெட்ரோ மட்டுமல்ல மதுரை மாநகராட்சி கழிவு நீர் கால்வாய்கள் கொண்டு வருவதற்கும் இரண்டு எம்பிக்கள் உடன் சேர்ந்து ஆலோசனை கூட்டம் நடைபெற உள்ளது. அடிப்படை வசதி இல்லாமல் மதுரை இருந்தது இதற்கு முன்னால் அமைச்சர்கள் எம்எல்ஏக்கள் காரணம் இதனை சரி செய்யும் பணி குறித்து ஆலோசனை நடத்த உள்ளோம்.

தொடர்ந்து எம்பி மாணிக்கம் தாகூர் பேசும்போது: தமிழக அமைச்சர் அவையில் காங்கிரசுக்கு இடம் கிடைத்திருப்பது மகிழ்ச்சியானது. மதுரையில் பொறுப்பு அமைச்சராக இருப்பதால் அவருக்கு மிகப்பெரிய பொறுப்பு உள்ளது மாநகராட்சியின் வளர்ச்சி என்பது பல வகையில் தடைபட்டிருந்தாலும் இனிவரும் காலங்களில் மதுரை உண்மையிலேயே மாநகரமாக வருகின்ற வாய்ப்பு அதிகமாக உள்ளது.

பொம்மை சொல்லி இருப்பது சிரிப்புக்குரிய விஷயம். பாஜக சட்டமன்ற உறுப்பினரும் அந்த தீர்மானத்தின் போது உள்ளே இருந்தார் அப்படி என்றால் அவர் மீது நடவடிக்கை எடுப்பார்களா. மேகதாது விஷயத்தில் ஒரு செங்கலை கூட கூட எடுத்து வைக்க விட மாட்டோம்.

தவெக காங்கிரஸ் உறவு நீண்ட நாள் உறவு இந்தஉறவுஒருமூச்சுவல் ரெஸ்பெக்ட்பாஜககாரர்களின் ஆசையை நிறைவேற்றும் நிலைக்கு காங்கிரஸ் வரவில்லை. எம்பிக்கள் இருக்கும் கட்சியில் இந்தியா கூட்டணியில் இருக்கும் தமிழக வெற்றி கழகத்திற்கு எப்போது எம்பிகள் வருகிறார்களோ அப்போது பேசுவோம் என்றார்.



மதுரையில் தமிழக வெற்றி கழகத்தின் நிறுவன தலைவரும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் ஆன ஜோசப் விஜய் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு மதுரை மண்டல போக்குவரத்து தொழிற்சங்கம் சார்பில் தமிழ்நாடு அரசு குழந்தைகளின் சேவைகள் பிரிவு மற்றும் சுரபி அறக்கட்டளை இணைந்து தாய்மடி இல்ல முதியோர் இல்லத்தில் அன்னதானம் வழங்கினர் இதில் மின்சாரம் மற்றும் சட்டத்துறை அமைச்சர் சி டி ஆர் நிர்மல் குமார் சிறப்பு விருந்தினர் கலந்து கொண்டு அன்னதானத்தை தொடங்கி வைத்தார் இதில் போக்குவரத்து மண்டல நிர்வாகிகள் சரவணன் ராதாகிருஷ்ணன் ரகுபதி பால்பாண்டி செல்வராஜ் மலைச்சாமி ஆகியோர் அன்னதானத்தை சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர் இதில் கட்சி நிர்வாகிகள் தொண்டர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்

## முதலமைச்சர் விஜய் பிறந்தநாளை முன்னிட்டு

# தேனியில் பள்ளி மாணவர்களுக்கான 5 கிலோ மீட்டர் தூரம் மாரத்தான் போட்டி



தமிழக முதலமைச்சர் விஜய்க்கு நாளை பிறந்த நாள் தினவிழாகொண்டாடப்படுவதை முன்னிட்டு தேனி மாவட்ட தடகள சங்கம் சார்பில் பள்ளி மாணவர்களுக்கான மரத்தான் போட்டி நடைபெற்றது

தேனி நேரு சிலையிலிருந்து தொடங்கிய மாரத்தான் போட்டியை த.வெ.க தேனிவடக்குமாவட்ட செயலாளர் பிரகாஷ் கொடியை சேர்த்து துவக்கி வைத்தார் இதில் 6 வயது முதல் 16 வயது வரை பள்ளி மாணவ மாணவிகள் என சுமார் 300க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு போட்டி தூரத்தை நோக்கி சென்றனர் தேனி நேரு சிலையில் இருந்து மாவட்ட விளையாட்டுமைதானம் வரை 5 கிலோமீட்டர் தூரத்திற்கு இந்த போட்டி நடைபெற்றது இந்தப் போட்டியில் மாணவர் மற்றும் மாணவிகள் சார்பில் முதல் மூன்று இடங்களை பிடித்தவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது மேலும் போட்டியில்பங்கேற்ற அனைத்து மாணவர்களுக்கும் பாராட்டு சான்றிதழ் வழங்கப்பட்டது முன்னிலை பிரகாஷ்தேனிவடக்கு மாவட்ட செயலாளர்

விழா ஏற்பாடு கௌதம் ராஜ் சீனிவாசன் தேனி மாவட்டம் மூத்தோர் தடகள சங்கம் செயலாளர் சிவக்குமார் கீதா சசி- தலைவர் தேனி மாவட்டம் முத்தோர் தடகள சங்கம்தேனி மாவட்ட தடகள சங்கத்தின் துணைத் தலைவர் சசிகுமார் தேனி மாவட்ட தடகள சங்கத்தின் இணை செயலாளர் சுந்தர் ஆகியோர் விழா ஏற்பாடுகளை செய்திருந்தனர்இந்த மாரத்தான் ஓட்டப்ப ந்தயத்தில் பிரிதிவிராஜ் முதல் பரிசும் தங்கபாண்டியன் இரண்டாம் பரிசும் தமிழ்ச்செல்வன் மூன்றாம் பரிசும் பெற்றனர் மேலும் அனைவருக்கும் சிறப்பு பரிசுகளும் சான்றிதழும் வழங்கப்பட்டது

## முதலமைச்சர் விஜய்யின் பிறந்தநாளை முன்னிட்டு

# தமிழ்நாடு சிலம்பாட்டக் கழகம் (TNSA) சார்பில்) தமிழகம் முழுவதும் 38 மாவட்டங்களில் மாநில அளவிலான மாபெரும் சிலம்பம் பேரணி சிறப்பாக நடைபெற்றது



தமிழர்களின் பாரம்பரிய வீரக்கலையான சிலம்பத்தை ஊக்குவிக்கும் வகையில் நடைபெறும் இந்த பேரணியில் ஆயிரக்கணக்கான சிலம்ப மாணவர்கள், பயிற்சியாளர்கள், மாவட்ட நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் ஆர்வமுடன் பங்கேற்று வருகின்றனர்.

ஈரோடு மாவட்டத்தில் நடைபெற்ற பேரணியை ஈரோடு மேற்கு சட்டமன்றத்தொகுதி உறுப்பினர் கே.கே.ஆனந்த்மோகன் கொடியசைத்து தொடங்கி வைத்தார். அதனை தொடர்ந்து ஈரோடு மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை ரவுண்டானா பகுதியில் இருந்து காலிங்கராயன் விருந்தினர் மாளிகை வரை மாணவ- மாணவர்கள் சிலம்ப சுற்றி அணிவகுப்பு மற்றும் விழிப்புணர்வு பேரணியாக சென்றனர்.

இந்த பேரணியின் முக்கிய நோக்கங்களை தமிழ்நாடு சிலம்பாட்டக் கழகம் (TNSA) ஈரோடு மாவட்ட செயலாளர் கந்தவேல் பத்திரிகையாளர் சந்திப்பில் தெரிவிக்கையில் போதைப்பொருள் பழக்கத்தை ஒழிப்போம்,உடல் நலத்தை காப்போம்,

பெண்கள் பாதுகாப்பை உறுதி செய்வோம், இளைஞர்களை விளையாட்டு மற்றும் பாரம்பரிய கலைகளில் ஈடுபடுத்துவோம், தமிழர்களின் வீரக்கலையான சிலம்பத்தை உலகளவில் பரப்புவோம் எனவும்,

நடைபெற்ற பேரணியில் முழுமையாக சிலம்பம் வளர்ச்சி, போதை ஒழிப்பு, பெண்கள் பாதுகாப்பு மற்றும் சமூக விழிப்புணர்வை மையமாகக் கொண்டது என தெரிவித்தார். மேலும் கூறுகையில் தமிழர்களின் பாரம்பரிய வீரக்கலையான சிலம்பத்திற்கு தமிழக அரசின் முழுமையான அங்கீகாரம் வழங்கப்பட வேண்டும். மேலும் சிலம்பம் விளையாட்டை விளையாட்டு ஒதுக்கீட்டில் (Sports Quota) சேர்த்து மாணவர்களுக்கு கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் உரிய வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும்" என் தெரிவித்தார்.

# திருப்பரங்குன்றம் மலையில் உள்ள தீபத் தூணில் தீபம் ஏற்றக்கோரி இந்து மக்கள் கட்சி சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம்

## அமைச்சர்கள் நிர்மல் குமார், வன்னியரசு மற்றும் கவிஞர் வைரமுத்துவை கண்டித்து கோஷங்களை எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்



மதுரை மாவட்டம் திருப்பரங்குன்றம் முருகன் கோயில் மலை மீது உள்ள தீபத் தூணில் தீபம் ஏற்ற வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி தமிழகம் முழுவதும் இந்து மக்கள் கட்சி சார்பில் உரிமை மீட்பு போராட்டம் நடைபெற்றது இதன் ஒரு பகுதியாக தேனியில் இந்து மக்கள் கட்சி தொண்டரணி மாநில துணைத் தலைவர் குரு ஐயப்பன் தலைமையில் தீபத் தூணில் தீபம் ஏற்ற வேண்டும் என வலியுறுத்தி கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்

தீபத் தூணில் தீபம் ஏற்ற வேண்டும் என்ற நீதிமன்ற உத்தரவுப்படி நீதிபதி சுவாமிநாதன் வழங்கிய தீர்ப்பை செயல்படுத்தக் கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்

மேலும் தீபத் தூணில் தீபம் ஏற்றுவதில் இருக்கும் நடைமுறையே தொடரும் என கூறிய அமைச்சர் நிர்மல் குமாரை கண்டித்தும் இந்து மதத்திற்கு எதிராக பேசி வரும் அமைச்சர் வன்னியரசு மற்றும் கருத்து வைரமுத்துவை கண்டித்தும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்

இந்து மக்கள் கட்சி தொண்டரணி மாநில துணை தலைவர் குரு ஐயப்பன், ஆன்மீக அணி மாநில செயலாளர் வேல்முருகன் தலைமையில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் மண்டல தலைவர் திரு கருப்பையா, மாவட்ட பொதுச்செயலாளர் மணியம்பட்டி கார்த்திக், இந்து மக்கள் கட்சி தொண்டர்அணிமாவட்ட தலைவர் ரவிச்சந்திரன், மாவட்ட துணைச் செயலாளர் கலைச்செல்வன், தேனி ஒன்றிய செயலாளர் ரங்கநாதன் , ஆன்மீக அணி மாவட்ட தலைவர் செல்வந்திரன், ஆன்மீக அணி கடமலை மயிலை வடக்கு ஒன்றிய செயலாளர் ராஜா, தெற்கு ஒன்றிய செயலாளர் மாயவிதாகரன் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்

# தொளசம்பட்டியில் முதலமைச்சர் விஜய் பிறந்தநாள் விழா கொண்டாட்டம்



சேலம் மாவட்டம் ஓமலூர் அருகே உள்ள தொளசம்பட்டியில்,தமிழக முதல்வர் ஜோசப் விஜய் அவர்களின் 52-வது பிறந்தநாளைமுன்னிட்டு சேலம் வடமேற்கு மாவட்ட பொருளாளர் A.M. பெருமாள் தலைமையில் பல்வேறு நலத்திட்ட நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

இதன் ஒரு பகுதியாக, அகிம்சைசீக்கிரம்அறக்கட்டளையின் மாணவ, மாணவிகளுக்கு நோட்டு புத்தகங்கள் வழங்கப்பட்டன. தொடர்ந்து, சுற்றுச்சூழல் பாதுகாப்பை வலியுறுத்தும் வகையில் மரக்கன்றுகள் நடப்பட்டன.

இந்த நிகழ்ச்சியில் ஓமலூர் வடக்கு ஒன்றிய செயலாளர் சீனிவாசன், ஓமலூர் வடக்கு ஒன்றிய இளைஞரணி செயலாளர் மணி, கலைச்செல்வன், தாரமங்கலம் ஒன்றிய செயலாளர், நகர செயலாளர்கள் மற்றும் தமிழக வெற்றிக் கழக (தவெக) நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# மதுராந்தகம் அருகே இரும்பேடு ஊராட்சியில் முதலமைச்சர் விஜய்யின் 52வது பிறந்தநாள் விழா

## மாபெரும் இலவச கண் மருத்துவ முகாம்



செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட இரும்பேடு அரசு மேல்நிலைப் பள்ளியில் தமிழக வெற்றிக் கழக பொதுச் செயலாளர் புஸ்ஸி ஆனந்த் ஆணைக்கிணங்க மாண்புமிகு தமிழக முதல்வர் ஜோசப் விஜய் அவர்களின் 52 வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு இரும்பேடு அரசு மேல்நிலைப் பள்ளியில் மாவட்ட மகளிர் நிர்வாகி

சுமதி சாமிகண்ணு தலைமையில் தமிழக வெற்றி கழகம் மற்றும் ஸ்மாட் விஷன் கண் மருத்துவமனை இணைந்து நடத்தும் மாபெரும் இலவச கண் மருத்துவ முகாம் சிதம்பரம் டாக்டர் தேவி மற்றும் ஒருங்கிணைப்பாளர் மைதிலி கோபிநாத் குழுவினர்கள் மருத்துவ உதவியாளர்கள் கமல் , புஷ்பராஜ், ஜெயபிரகாஷ், அட்சிதா, செர்லின் மேரி, ஒருங்கிணைப்பில் நடைபெற்றது இமருத்துவ முகாமில் சுற்று வட்டார கிராமத்திலிருந்து பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டு கண் புரை பரிசோதனை செய்து சிகிச்சை பெற்று சென்றனர் இதில் கலந்து கொண்ட அனைவருக்கும் அறுசுவை விருந்து வழங்கப்பட்டது

# மதுராந்தகத்தில் அதிமுக மாபெரும் பொதுக்கூட்டம்

## மாவட்ட செயலாளர் திருக்கழுக்குன்றம் எஸ்.ஆறுமுகம் பங்கேற்பு



செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் தேரடி தெருவில் செங்கல்பட்டு கிழக்கு மாவட்ட அதிமுக சார்பில் தமிழக அரசு கண்டித்து கண்டன பொதுக்கூட்டம் அதிமுக சார்பில் செங்கல்பட்டு கிழக்கு மாவட்ட கழக செயலாளர் திருக்கழுக்குன்றம் எஸ் ஆறுமுகம் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மதுராந்தகம் அதிமுக நகர கழக செயலாளர் பூக்கடை கே சி சரவணன் அவர்கள் முன்னிலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட மாநில அவை உறுப்பினர் தனபால், செய்யூர் சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் பெரும்பாக்கம் ராஜசேகர், கழக அமைப்பு செயலாளர் வாலாஜாபாத் கணேசன்,தலைமை பேச்சாளர் கல்யாணசுந்தரம், அமுதா அருணாசலம், அப்சரா ரெட்டி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கனிதா சம்பத், இவர்கள் கலந்து கொண்டு அரசின் அவலங்களை சிறப்புரை யாற்றினர் அப்போது தலைமைக் கழக பேச்சாளர் அமுதா அருணாச்சலம் பேசுகையில் தமிழகத்தில் தமிழக வெற்றிக்கழக நிர்வாகிகளால் சிறு வயது முதல் முதியவர் வரை பாலியல் வன்கொடுமை செய்யப்படுகிறார்கள் இதுவரை அக்கட்சி தலைவர் ஜோசப் விஜய் இதுவரை ஒரு கண்டனம் கூட தெரிவிக்கவில்லை தமிழகத்தில் 5 முதல் 6 மணி நேரம் மின்வெட்டு நடைபெறுகிறது இது குறித்தும் அவர் எதுவும் பேசவில்லை என பேசினார் இந்தக் கூட்டத்தில் செங்கல்பட்டு கிழக்கு மாவட்ட நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# தமிழ்நாடு கைத்தறி, துணிநூல் மற்றும் காதித்துறை அமைச்சர் ம.விஜய் பாலாஜி

## தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வு வாரியம் நடத்தும் குரூப் I,II,IIA,IV ஆகிய போட்டித்தேர்வுகளுக்கான கட்டணமில்லா போட்டித்தேர்வு பயிற்சி வகுப்பினை துவக்கி வைத்தார்



தமிழ்நாடு கைத்தறி, துணிநூல் மற்றும் காதித்துறை அமைச்சர் ம.விஜய்பாலாஜி நேற்று (21.06.2026) ஈரோடு இடையன்காட்டுவலசு, மாநகராட்சி உயர்நிலைப்பள்ளியில் டீம் அகாடமி சார்பில் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வு வாரியம் நடத்தும் குரூப் I,II,IIA, IV ஆகிய போட்டித்தேர்வுகளுக்கான கட்டணமில்லா போட்டித்தேர்வு பயிற்சி வகுப்பினை துவக்கி வைத்தார்.

தமிழ்நாடு கைத்தறி, துணிநூல் மற்றும் காதித்துறை அமைச்சர் பேசும் போது தெரிவித்ததாவது, தமிழ்நாடு முதலமைச்சர் ச.ஜோசப் விஜய் அனைத்து தரப்பு மக்களுக்கும் அரசின் திட்டங்கள் சென்று சேர வேண்டும் என்ற நோக்கில் திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகின்றார்கள். அந்த வகையில் இன்றையதினம் போட்டித்தேர்வுகளுக்கான பயிற்சி வகுப்பு துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இந்த பயிற்சி வகுப்பானது கடந்த 7 ஆண்டுகளாக செயல்பட்டு வருகிறது. இந்த பயிற்சி வகுப்பில் பயின்ற 10 மாணவ, மாணவியர்கள் போட்டித் தேர்வில் வெற்றி பெற்று பல்வேறு அரசு துறைகளில் பணியாற்றி வருகின்றார்கள். இந்த பயிற்சி வகுப்பினை அனைத்து தரப்பினர்களும் பயன்படுத்திக்கொள்ள வேண்டும், மேலும் மாணவர்கள் முயற்சி எடுத்து திட்டமிட்டு படித்தால் எளிதில் வெற்றி பெறலாம். இந்த மையத்திலிருந்து ஏராளமானவர்கள் வெற்றி பெற்று பணியில் சேர்கிறார்கள் என்ற செய்தி என் காதுகளுக்கு விரைவில் எட்ட வேண்டும் என்பது எனது கனவாகும். இப்பயிற்சியை முன் நின்று நடத்தும் டீம் அக்காடமியில் போட்டித் தேர்வு பயிற்சி மைய உறுப்பினர்கள் அனைவருக்கும் எனது வாழ்த்துக்களையும்,பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன் எனப்பேசினார்.

மேலும் இப்பயிற்சியில் போட்டித் தேர்வு பயிற்சியாளர்கள் உட்பட 100-க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். இந்த பயிற்சி மையத்தில் சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமைமற்றும்அரசு விடுமுறை நாட்களில் பயிற்சி வகுப்புகள் நடைபெறும்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி, ஈரோடு மாநகராட்சி ஆணையாளர் அர்பித்ஜெயின்,பள்ளித்தலைமையாசிரியர் பி.அமுதா, தலைவர் டீம் அக்காடமி ப.மாரிமுத்து, செயலாளர் அ.ஹாத்திம்தாய், இயக்குநர், அக்னி ஸ்டீல் கே. தங்கவேல் மற்றும் எஸ். அய்யாசாமி உட்பட துறைசார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# நாமக்கல் மாவட்டம் குமாரபாளையம்

## தளிர்விடும் பாரதம் அறக்கட்டளையின் சார்பில் சர்வதேச யோகா தினம்



நாமக்கல் மாவட்டம் குமாரபாளையம் தளிர்விடும் பாரதம் அறக்கட்டளையின் சார்பில் சர்வதேச யோகா தினம்* சின்னப்பநாயக்கன்பாளையம் நகராட்சி உயர்நிலைப் பள்ளி வளாகத்தில் நடைபெற்றது. நிகழ்விற்கு தளிர்விடும் பாரதம் அறக்கட்டளையின் தலைவர் சீனிவாசன்* தலைமை வகித்தார்.

தளிர்விடும் பாரதம் செயலாளர் பிரபு அனைவரையும் வரவேற்று பேசினார்.

நகராட்சி உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியை மலர்விழி, சமூக சேவகர் சித்ரா பாபு, தொழிலதிபர் ரேவதி ஆறுமுகம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட இயற்கை மற்றும் யோகா மருத்துவர் V.S.ஸ்ரீமதி அவர்கள் பேசும்பொழுதுஇயற்கையோடு இணைந்து வாழ்வது குறித்தும்யோகா செய்வதன் மூலம் ஏற்படும் நன்மைகளையும் மற்றும் பள்ளி கல்லூரி மாணவ மாணவிகள் எவ்வாறு தங்களது உடல்நிலைகளை பேணி காத்துக் கொள்ள வேண்டும் என்பதையும் தெளிவாக எடுத்துரைத்தார். மற்றொரு சிறப்பு விருந்தினர் யோகா ஆசிரியர் லெனின் பல்வேறு வகையான ஆசனங்களை எவ்வாறு செய்வது என்று பயிற்சி அளித்தார், மேலும் யோகா பயிற்சிகளைதினம்தோறும் மேற்கொண்டுஅனைவரும் சிறப்புற வாழ வேண்டும் என பேசினார்.பயிற்சி முகாமில் நூற்றுக்கும் மேற்பட்ட பள்ளி, கல்லூரி மாணவ மாணவிகள் பொதுமக்கள் சமூக ஆர்வலர்கள் கலந்து கொண்டனர். யோகா பயிற்சி முகாமில் கலந்து கொண்ட அனைவருக்கும் பாராட்டு சான்றிதழ் வழங்கப்பட்டது.

அடுத்த ஓரிரு மாதங்களில்பள்ளி, கல்லூரி மாணவ மாணவிகளுக்கு யோகா போட்டி நடத்தப்படும் என்று தளிர்விடும்பாரதம்அமைப்பினர் தெரிவித்தனர். தளிர்விடும் பாரதம் அறக்கட்டளையின் துணைத் தலைவர்கள் செந்தில் குமார் வரதராஜன் உறுப்பினர்கள் தமிழ்செல்வி சீனிவாசன், சரண்யா பிரபு, சம்ரிதி ஆகியோர் விழாவிற்கான ஏற்பாடுகளை சிறப்பாக செய்திருந்தனர்.

விழாவின் முடிவில் தளிர்விடும் பாரதம் அறக்கட்டளையின் பொருளாளர் சின்னையா அனைவருக்கும் நன்றி கூறினார்.






# ஈரோடு மாவட்ட அகில இந்திய விஸ்வகர்மா பேரவை சார்பில் நலத்திட்ட விழா

ஈரோடுமாவட்டஅகில இந்திய விஸ்வகர்ம பேரவை சார்பாக நலத்திட்டம் வழங்கும் விழா அகில இந்திய விஸ்வகர்மபேரவையின்தேசிய தலைவர் எ.குமார் ஆச்சாரியார் தலைமையில் மாநிலபொதுச்செயலாளர் எம்.மருதராஜ கணேஷ் முன்னிலையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் மாநில அமைப்பு செயலாளர் விழுப்புரம் டிவி சுப்பிரமணியம் பத்தாம் வகுப்பு 12ஆம் வகுப்பு முடித்த மாணவ –மாணவிகளுக்கு விருது வழங்கப்பட்டது மற்றும் மகளிர்கான நலத்திட்டங்கள் கலைஞர் கைவினை திட்டத்தின் கீழ் மற்றும் பெண்கள் தொழில் முனைவோர் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் பயனடைந்தோர்க்கு வழிகாட்டுதலும் ஆலோசனையும் வழங்கப்பட்டது .இவ்விழாவில் கோபி ஒன்றியம்சத்தியமங்கலம் ஒன்றியம் ஆகிய புதிய கிளைகள் உருவாக்கப்பட்டன. அதன் நிர்வாகிகளுக்கு சால்வை அணிவிக்கப்பட்டது. இந்த நிகழ்விற்கான ஏற்பாட்டினை மாவட்ட தலைவர் ஆர். ஈஸ்வரமூர்த்தி, மாவட்ட செயலாளர் ஆர்.மூர்த்தி, மாவட்ட பொருளாளர் சங்கர் ஆகியோர்ஏற்பாடுசெய்தனர். நிர்வாகிகள் மற்றும்பயனாளிகள்கலந்து கொண்டனர்.

# ஈரோடு மண்டலம் மற்றும் வேளாளா மகளிர் கல்லூரி (தன்னாட்சி) சார்பில் சர்வதேச யோகா தினம்







பாரதப் பிரதமர் நரேந்திர மோடி பெருமுயற்சியால் ஐ.நா.சபையில்தீர்மானம் இயற்றப்பட்டு ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 21–ம் தேதி சர்வதேச யோகா தினமாக உலகம் முழுவதும் கொண்டாடப்பட்டு வருகிறது. தத்துவஞானி வேதாத்திரி மகரிஷி அவர்களால் 1958–ம் ஆண்டு நிறுவப்பட்ட உலக சமுதாய சேவா சங்கம் ஈரோடு மண்டலம் மற்றும் வேளாளா மகளிர் கல்லூரி (தன்னாட்சி), சார்பில் இந்த ஆண்டு ஜூன் 21 நேற்று சர்வதேச யோகாதினம் VET Dr.A.P.J. அப்துல்கலாம் கரையரங்கில் நடைபெற்றது. காலை 7.00மணி முதல் 8.05மணி வரை நடைபெற்ற இச்சிறப்பு மிக்க நிகழ்ச்சியில் வேளாளர் மகளிர் கல்லூரி (தன்னாட்சி) செயலாளர் செ.து. சந்திரசேகர் முன்னிலை ஆற்றினார்கள். உலக சமுதாய சேவா சங்கத் தலைவர் பத்மபூஷண் அருள்நிதி Dr. SKM.மயிலானந்தன் தலைமையுரை ஆற்றினார்கள். வேளாளர் மகளிர் கல்லூரியின் 200 மாணவிகள் செய்து காண்பிக்கும் நிகழ்வு நடைபெற்றது. ஜாதி,மதம்,மொழிகடந்த சேவை அமைப்பான உலக சமுதாய சேவா சங்கம் நடத்திய நிகழ்வாகும். மனிதகுலம் முழுமை நல வாழ்வு பெற்று ஆரோக்கியத்தோடும், அமைதியோடும் வாழ வேண்டும் என்ற நோக்கத்தில் மனவளக்கலை யோகாவை கற்றுக் கொடுத்து வரும் உலக சமுதாய சேவா சங்கத்தின் யோகா தின நிகழ்ச்சியில் மாணவியர்கள், மன்ற அன்பர்கள் மற்றும் பொதுமக்கள் உட்பட சுமார் 400 பேர் கலந்து கொண்டனர்.

# நீட் விலக்குக்காக சட்டப்பூர்வ நடவடிக்கை எடுக்க வேண்டும்; திருமாவளவன் கோரிக்கை



விடுதலைச் சிறுத்தைகள் கட்சி தலைவர் திருமாவளவன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது;–

நீட் தேர்வு எழுதவிருந்த மாணவிகள் அண்மையில் கோவையை சார்ந்த அனு கீர்த்தனா மற்றும் சேலம் மாணவி கோபிகா ஆகியோர்தற்கொலைசெய்துகொண்ட செய்தி அதிர்ச்சியையும் வேதனையையும் அளிக்கிறது.

தொடரும் தற்கொலைகள்

கோவையைச் சார்ந்த மாணவி அனுகீர்த்தனா 'தேர்வு அச்சத்தால்' எழுந்த மன அழுத்தம் காரணமாக உறவினர்களுக்கு 'வாட்ஸ்ஆப்' மூலம் செய்தி அனுப்பிவிட்டு கடந்த ஜூன் 17 அன்று நஞ்சு அருந்தி தற்கொலை செய்துகொண்டார்.சேலம் மாவட்டம் எடப்பாடி அருகே வெள்ளாளபுரம் பகுதியைச் சேர்ந்த கோபிகா என்ற மாணவியும் தூக்கிட்டு தற்கொலை செய்துகொண்டுள்ளார். அரியலூர் மாணவி அனிதா முதல் தற்போது கோபிகா வரை நீட் தேர்வால் தொடரும் தற்கொலைகள் மிகுந்த கவலையளிக்கிறது.

நீட் தேர்வைக் கண்டு மாணவர்கள் அச்சமடைவதற்கு மருத்துவக் கல்வி தொடர்பாக நாம் உருவாக்கி வைத்திருக்கிற 'பிரமையே' காரணமாகும். மருத்துவம் படித்தால்தான் சமூகத்தில் உயரிய மதிப்பைப் பெற முடியும் என்றும்; அடுத்து பெருமளவில் பொருளாதாரத்தையும் பெருக்கிக் கொள்ள முடியும் என்றும் இந்த சமூகம் கட்டமைத்துள்ள ஒரு மாயை தான், மாணவர்களை 'இந்தக் கல்வியைப் பெறமுடியாமல் போனால் எதிர்காலம் என்ன ஆகுமோ' என்கிற அதீத கற்பனைகளுக்கும் அச்சத்திற்கும் இட்டுச் செல்கிறது.எனவே,இத்தகைய மாயையைக்கும் அச்சத்துக்கும் ஆட்படாமல் துணிச்சலோடு எதனையும் எதிர்கொள்ள வேண்டுமென மாணவச் செல்வங்களுக்கு வேண்டுகோள் விடுக்கிறோம்.

கடந்த காலங்களிலும் மாநில அரசின் சார்பில் மருத்துவக் கல்விக்கு நுழைவுத்தேர்வுகள் நடந்துள்ளன. ஆனால் அப்போதெல்லாம் இத்தகைய பிரமை மாணவர்களிடையே கட்டமைக்கப்படவில்லை.

நீட் விலக்கு

இன்றைய சூழலில் இந்தியமத்திய அரசின்தலையீடும் நீட் தேர்வுக்குத் தரப்படும் அதீதமான முக்கியத்துவமும் அதனையொட்டி வணிகப் போட்டிகளைத் தீவிரப்படுத்தும் தனியார் பயிற்சி நிறுவனங்களால் மாணவர்களிடையே உருவாகும் 'தேர்வு அச்சமும்' தான் இவ்வாறான எதிர்விளைவுகளை ஏற்படுத்துகின்றன.

ஏற்கனவே சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட 'நீட் விலக்கு' மசோதாவைக் குடியரசுத் தலைவர் மறுதலித்ததை எதிர்த்து, உச்சநீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசின் சார்பில் தொடரப்பட்ட வழக்கு நிலுவையில் உள்ளது. தமிழ்நாடு சட்டமன்றக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின் அடிப்படையில் உச்சநீதிமன்றத்தில் புதிய வழக்கும் தொடரப்பட்டுள்ளது.

இத்தகைய சூழலில், நீட் தேர்விலிருந்து முழு விலக்குப்பெறுவதற்கேற்ப தமிழ்நாடு அரசு உச்சநீதிமன்றத்தில் சட்டரீதியாக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளைத் தீவிரமாக முன்னெடுக்க வேண்டும் என வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறோம்! இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அண்ணல் நபியே அழகிய முன் மாதிரி என்கிற பிரச்சார செயல் திட்டத்தின் கீழ்

# தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாஅத் (TNTJ) புளியங்குடி மேற்கு கிளை சார்பாக ருக்கையா ரலி மகளிர் இஸ்லாமிய கல்வியகத்தின் பட்டமளிப்பு விழா மற்றும் பொதுக்கூட்டம்



அண்ணல்நபியேஅழகிய முன் மாதிரி" என்கிற பிரச்சார செயல் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாஅத் (TNTJ) புளியங்குடி மேற்கு கிளை சார்பாக, "ருக்கையா ரலி மகளிர் இஸ்லாமிய கல்வியகத்தின்" பட்டமளிப்பு விழா மற்றும் பொதுக்கூட்டம் மாவட்ட தலைவர் அப்துல் ஸலாம் முன்னிலையில் கிளை தலைவர் அப்துந் நாசர் தலைமையில் (20.06.2026 – சனிக்கிழமை) மாலை 4.30 மணிக்கு, புளியங்குடி ரஹ்மத் பால்பண்ணை அருகில் நடைபெற்றது இந்த பொதுக்கூட்டத்தில்

அண்ணல்நபியேஅழகிய முன் மாதிரி என்கிற தலைப்பில் A. சபீர் அலி M.I.Sc (மாநில செயலாளர்) அவர்களும்

இந்திய முஸ்லிம்கள் சந்திக்கும் சவால்கள் என்கிற தலைப்பில் S. அல் அமீன் (மாநில செயலாளர்)அவர்களும் உரையாற்றினார்கள் – இந்த கூட்டத்தில் முக்கிய கோரிக்கைகளை முன்வைத்து பின்வரும் முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு, பத்திரிகை அறிக்கையாக வெளியிடப்படுகிறது:

1. பாலியல் வன்கொடுமைகளுக்கு எதிராக தமிழகம் தழுவிய பேரணி: கோவை சூளூரில் 10வயது சிறுமி,கும்மிடிப்பூண்டியில் 3 வயது குழந்தை மற்றும் ஊத்தாங்கரையில் மூதாட்டி ஆகியோருக்கு நடந்த கொடூரமான பாலியல் அத்துமீறல்கள் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளன. தினந்தோறும் நடக்கும் இத்தகைய குற்றங்களைக் கண்டித்தும், பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தவும் தமிழகம் முழுவதும் நூற்றுக்கணக்கான கண்டனப் பேரணிகளை நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

மேகதாது விவகாரம்

2. மேகதாது அணை விவகாரத்தில் தமிழக உரிமைகளைப் பாதுகாத்தல்: மேகதாது அருகே கர்நாடக அரசு அணை கட்டுவதை எதிர்த்து, தமிழக சட்டமன்றத்தில் அனைத்துக் கட்சிகளும் இணைந்து தீர்மானம் நிறைவேற்றியது வரவேற்கத்தக்கது. அதே ஒற்றுமையுடன், தமிழகத்தைச் சேர்ந்த அனைத்து எம்பிக்களும், எம்எல்ஏக்களும் ஒரு அணியாகத் திரண்டு, ஒன்றியஅரசுக்குஅழுத்தம் கொடுத்து மேகதாது அணைத் திட்டத்தை முற்றிலுமாக தடுத்து நிறுத்த வேண்டும்.

Telegram தடை

3. 'டெலிகிராம்' (Telegram) சமூக வலைத்தளத் தடைக்குக் கண்டனம்: நீட் தேர்வு வினாத்தாள் கசிவைத் தடுக்க என்ற காரணத்தைக் கூறி, 'டெலிகிராம்' செயலியைத் தற்காலிகமாகத் தடை செய்திருப்பது கண்டனத்திற்குரியது. வினாத்தாள் கசிவுக்குத் தனிநபர் மற்றும் நிர்வாகத் தவறுகளே காரணமே தவிர, செயலி காரணம் அல்ல. இது மக்களின் கருத்துரிமையைப் பறிக்கும் செயல் மற்றும் சமூக வலைத்தளங்களை முடக்க ஒன்றிய அரசு போடும் முதற்கட்டத் திட்டமாகும்.

நீட் தேர்வு அமைச்சர் பதவி நீக்கம்

4. நீட் தேர்வு முறைகேடு – ஒன்றிய அமைச்சர் தர்மேந்திர பிரதான் பதவி நீக்கக் கோரிக்கை: ஒன்றிய பாஜகஅரசு வரலாற்றைத் திரித்து பாடப் புத்தகங்களை உருவாக்குவதிலும், சிலரின் லாபத்திற்காக நீட் தேர்வை நடத்துவதிலும் மட்டுமே குறியாக உள்ளது. இதனால் தேர்வுகள்ரத்தாகிஏழைமாணவர்கள் கடும் மன உளைச்சலுக்கு ஆளாகி, தற்கொலை செய்துகொள்ளும் அவல நிலை ஏற்பட்டுள்ளது. இந்தத் தோல்விகளுக்குப் பொறுப்பேற்று ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் உடனடியாகப் பதவி நீக்கம் செய்யப்பட வேண்டும்.

ஹைட்ரோ கார்பன் திட்டத்திற்கு அனுமதி வழங்க கூடாது

5. பரங்கிப்பேட்டை ஹைட்ரோ கார்பன் திட்டத்திற்கு அனுமதி வழங்கக் கூடாது: ஹிந்துஸ்தான் எண்ணெய் நிறுவனம் பரங்கிப்பேட்டை கடற்பகுதியில் 4 ஹைட்ரோ கார்பன் கிணறுகளை அமைக்கத் திட்டமிட்டுள்ளது. இதனால் மீன்வளம், மாங்குரோவ் காடுகள் மற்றும் சுற்றுச்சூழல் கடுமையாகப் பாதிக்கப்பட்டு மீனவர்களின் வாழ்வாதாரம் அழியும். எனவே, கடந்த காலங்களைப் போலவே ஆளும் தமிழ்நாடு அரசு இத்திட்டத்திற்கு எவ்வித அனுமதியும் வழங்கக் கூடாது.

முஸ்லிம்களின் இட ஒதிக்கீடு

6.இஸ்லாமியர்களுக்கான 7% தனி இடஒதுக்கீட்டை உறுதி செய்தல்: தமிழக இஸ்லாமியர்கள் கல்வி மற்றும் பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கியுள்ளனர். தனது தேர்தல் அறிக்கையில் சச்சார் கமிட்டி பரிந்துரைகளை நிறைவேற்றுவோம் எனக் கூறியுள்ள தவெக, வெறும் சடங்குகளைச் செய்வதோடு நிறுத்திக் கொள்ளாமல், இஸ்லாமியர்களின் நீண்டகாலக் கோரிக்கையான தனி இடஒதுக்கீட்டை 7 சதவீதமாக உயர்த்தித் தர உறுதியான குரல் கொடுக்க வேண்டும்.

சாராயக்கடைகளை மூடுதல்

7. டாஸ்மாக் கடைகளை மூடி பூரண மதுவிலக்கைக் கொண்டு வருதல்: ஆட்சிக்கு வந்ததும் 700டாஸ்மாக்கடைகளை மூடுவோம் என்ற தவெக–வின் அறிவிப்பை தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாஅத் ஆதரித்தது. ஆனால்,சொன்னபடி பல கடைகள் இன்னும் மூடப்படாமல் தொடர்வது ஏமைற்றம் அளிக்கிறது. அரசு பொருளாதார லாபத்தைப் பார்க்காமல், சாராயக் கடைகளைத் தனியாருக்குக் கொடுக்கும் முடிவைக் கைவிட்டு, தமிழகத்தில் பூரண மதுவிலக்கை அமல்படுத்த வேண்டும்.

வாக்குச் சீட்டு முறை

8.மீண்டும் நம்பகமான 'வாக்குச்சீட்டு' (Ballot Paper) முறைக்கு மாறுதல்: ஐந்து மாநிலத் தேர்தல் முடிவுகள் வெளியாகியுள்ள நிலையில், மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்கள் (EVM) மீது எதிர்க்கட்சிகளுக்கும் பொதுமக்களுக்கும் இன்னும் முழுமையான நம்பிக்கை ஏற்படவில்லை. எந்திரங்களின் நம்பகத்தன்மை குறித்த கேள்விகளுக்குத் தேர்தல் ஆணையம் முறையான பதில் அளிக்காததால், ஜனநாயகத்தைக் காக்க மீண்டும் பழைய வாக்குச்சீட்டுமுறைக்கே தேர்தல் ஆணையம் திரும்ப வேண்டும்.

பொதுமக்களின் அடிப்படை உரிமைகள், வாழ்வாதாரம், மாவட்ட உள்கட்டமைப்பு மற்றும் நாட்டின் ஜனநாயகம் சார்ந்த இந்த முக்கியக் கோரிக்கைகளை மத்திய–மாநில அரசுகள் உடனடியாகக் கவனித்து ஆவண செய்ய வேண்டும் என இப்பொதுக்கூட்டத்தின் வாயிலாக மிக அழுத்தமாக வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறோம். என்கிற தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன இந்த பொதுக்கூட்டத்தில் மாவட்ட துணை செயலாளர்கள் ஹாஜா மைதீன், பீர் மைதீன், செய்யதலி, முகம்மது அலி பிலால், மாணவரணி செயலர் ரபீக் ராஜா, மருத்துவ அணி அப்துல்லாஹ்,வர்த்தகஅணி இனாமுல் ஹக் ஆகியோருடன் புளியங்குடி மேற்கு கிளை செயலாளர் முஹம்மது யூசுப், பொருளாளர் தாஜ் யூசுப் துணைத் தலைவர் நூர் முகம்மது துணைச் செயலாளர் சம்சுதீன் புளியங்குடி அனைத்து கிளை முகமது காசிம் , செய்யது இப்ராஹிம் உள்ளிட்டோருடன் திரளான பொதுமக்கள் கலந்துகொண்டனர்

இறுதியில் கிளை செயலாளர் யூசுப் நன்றியுரையாற்றினார்

பொதுக்கூட்டத்திற்கான ஏற்ப்பாடுகளை மாவட்ட தொண்டரணி செயலருடன் கிளை தொண்டரணி செயலாளர் தலைமையிலான தொண்டரணியினர் சிறப்பாகசெய்திருந்தனர்

இங்ஙனம்

S. ஜலாலுதீன் M.B.A
மாவட்ட செயலாளர்

ஊடக தொடர்பிற்க்கு
முஹமதலி பிலால்
97915 61316

# NEET aspirant determined to write exam after road accident, NTA arranges separate room with medical support



The National Testing Agency (NTA) made special arrangements for a NEET aspirant who had met with a road accident a week earlier, following a request from her father. Shrishti Dubey suffered nine fractured ribs and lung injuries in a road accident on June 14. She underwent major vascular surgery and was placed on artificial ventilation. She has since been extubated and is now recovering. Despite her condition, she remained determined to appear for the NEET examination.

Shrishti's father requested the National Testing Agency (NTA) to help her give exam. He also informed the authorities that ILS Hospital, where she was treated, would provide the necessary medical support, including doctors, paramedics and other required arrangements.

The father requested the NTA to allow his daughter to take the examination and sought a seating arrangement with a chair and table on the ground floor of the examination centre.

The NTA stepped in and provided her with a separate room, medical support and a standby ambulance at the examination centre. Union Education Minister Dharmendra Pradhan also spoke to Shrishti's parents on Sunday. Her parents expressed their gratitude to the NTA and the minister during the phone call.

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.